// தனிகவனம் //மிக மிக அவசரம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3039/ஆ5/2026, நாள். /07/2026**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தேசிய நுகர்வோர் / உலக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தின விழிப்புணர்வு – நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வு பணிகள் – 2025–2026ஆம் ஆண்டிற்கான தேசிய நுகர்வோர் / உலக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தினம் விழா நடத்துதல் – வேலூர் மாவட்டம், பள்ளி மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் ஓவியப் போட்டி, கவிதை போட்டி மற்றும் கட்டுரை போட்டி நடத்துதல் –சார்பு

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.கு1/300/2025, நாள். 07.07.2026 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 08.07.2026)

.....

வேலூர் மாவட்டத்தில் 2025–ம் ஆண்டுக்கான தேசிய நுகர்வோர்/உலக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தினம் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. பார்வையில் காணும் கடிதத்தில் பள்ளி மாணாக்கர்களிடையே ஓவியம், கவிதை மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்தி முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணாக்கர்களின் விவரம் மற்றும் அவர்களின படைப்புகள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019–ம் சிறப்பம்சங்கள் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம்–2006 (பேக்கிங் மற்றும் லேபிளிங்) சட்ட விதி மீறல்கள் கண்டறிதல்.
2. உணவுப்பொருள் வீணாவதை தடுத்தல் அல்லது தவிர்த்தல்
3. தவறான விளம்பரங்களால் ஏற்படும் பாதிப்பிலிருந்து நுகர்வோர்கள் விழித்துக்கொளுதல் மற்றும் இந்திய தர அமைவனத்தின் ISO முத்திரைகள் குறித்தும் மற்றும் ISI முத்திரைகள் உடன் கூடிய பொருட்களான Helmet,Pressure cooker போன்ற பொருட்களை நுகர்தல்.

ஆகிய தலைப்புக்களில் அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு பயிலும் மாணவர்களில் ஓவிய போட்டிக்கு 1 வரும் . கவிதை போட்டிக்கு 1 வரும் கட்டுரை போட்டிக்கு 1 வரும் 24–07–2026 அன்று காலை 9.30 மணிக்கு வேலூர் **ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளியில்** நடைபெறும் மாவட்ட அளவிலான போட்டிக்கு பொறுப்பு ஆசிரியர் ஒருவருடன் மாணவர்களை அனுப்பி வைக்க தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பு:– போட்டிகான உபகரணங்களை போட்டியாளர்களே உடன் கொண்டு வரவேண்டும்.

23/7/26

முதன்மைக் கல்வி அலுவலர், (ஒ)
வேலூர்.

பெறுநர் –
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமை ஆசிரியர்கள்
அரசு / அரசு நிதியுதவி உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
நகல்–
வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக
பணிந்து அனுப்பப்படுகிறது.